**பன்னாட்டு நாணய நிதியம் இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் ஐந்தாவது மீளாய்வு தொடர்பில் அலுவலர் - மட்டத்திலான உடன்படிக்கையை அடைந்துள்ளது.**

2019 மார்ச்சு 01

> இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களேயன்றி அது பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்தினைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இதுவரைக்கும் கண்டறியப்பட்ட விடயங்களின் அடிப்படையில் அலுவலர்கள் அறிக்கையினைத் தயாரிப்பதுடன் இது முகாமைத்துவத்தின் ஒப்புதலுக்குட்பட்டு, கலந்துரையாடல்களுக்கும் தீர்மானங்களுக்குமாக பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

- அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் மீள்சீர்த்திருத்தம் என்பன முக்கிய சமூக மற்றும் அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான இடைவெளியை வழங்குகின்ற அதேவேளை இலங்கையின் உயர்ந்தளவான படுகடனை கீழ்நோக்கிய பாதையில் கொண்டுசெல்வதற்கு அவசியமானதாகும்.

- காத்திரமான கொள்கைக் கலவை மற்றும் செலாவணிவீத நெகிழ்வுத்தன்மை என்பவற்றால் துணைபுரியப்பட்டு வெளிநாட்டு செலாவணி ஒதுக்கத்தை மீள்கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் அதிர்வுகளின் தாக்குபிடிக்கும் தன்மை மற்றும் சந்தை நம்பகத்தன்மை என்பவற்றை பலப்படுத்துவதற்கு இன்றியமையாதவையாகும்.

- நிறுவனங்களை பலப்படுத்தல் மற்றும் அமைப்பியல் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துதல் என்பன இலங்கையில் பலமான, நிலைத்துநிற்கக்கூடிய மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சிக்கான அடித்தளத்தையிடுவதற்கு உதவ முடியும்.

மனுவெல்லா கொறேட்டி தலைமையிலான பன்னாட்டு நாணய நிதிய அலுவலர் குழுவொன்று, மூன்று வருட விரிவாக்கப்பட்ட நிதி வசதியினால் துணைபுரியப்பட்ட இலங்கைப் பொருளாதாரத்தின் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஐந்தாவது மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல்களுக்காக 2019 பெப்புருவரி 14-28 வரையான காலப்பகுதியில் கொழும்பிற்கு விஜயம் செய்தது. விஜயத்தின் இறுதியில் செல்வி. கொறேட்டி பின்வருமாறான அறிக்கையை வெளியிட்டார்:

“2018இன் இறுதியில் இடம்பெற்ற அரசியல் நெருக்கடியினைத் தொடர்ந்து இலங்கை அதிகாரிகள் அவர்களின் பொருளாதார சீர்த்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தினை மீண்டும் அதே பாதையில்

கொண்டுசெல்வதற்கு தற்போது மேற்கொண்டுவருகின்ற முயற்சிகளை பன்னாட்டு நாணய நிதியத்தின் குழு வரவேற்கின்றது. குழுவானது ஐந்தாவது மீளாய்வு மற்றும் பொருளாதார சீர்த்திருத்த நிகழ்ச்சி நிரலை நிறைவுசெய்வதற்காக அதிகளவான நேரத்தை அனுமதித்தல், விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஒழுங்குபடுத்தலினை மற்றுமொரு ஆண்டிற்கு விரிவாக்குவதற்கு, எஞ்சிய பகிர்ந்தளிப்புக்களை இக்காலப்பகுதியில் சமமாக பரவலடைவதனை அனுமதிப்பதற்காக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் என்பவை தொடர்பில் இலங்கை அதிகாரிகளுடன் அலுவலர் மட்டத்தில் புரிந்துணர்வினை அடைந்துள்ளது. விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணங்கிச்செல்லும் வகையில் பாராளுமன்றத்தில் 2019ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் திட்டமிடப்பட்ட சமர்ப்பிப்பிற்கு உட்பட்டு சபையானது 2019 மே மாதத்தில் அதனது ஐந்தாவது மீளாய்வினை முடிவுறுத்துவதற்கான இலங்கையின் வேண்டுகோளை கருத்திற்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இம்மீளாய்வு தொடர்பில் நிலுவையிலுள்ள அனைத்துவிதமான நடவடிக்கைகள் மற்றும் அமைப்பியல்சார் அடிப்படை அளவுக்குறி என்பவற்றை அடுத்துவரும் சில வாரங்களில் முடிவுறுத்துவதற்கு அதிகாரிகள் படிமுறைகளை எடுத்துவருகின்றனர்.

“வெளிநாட்டு அதிர்வுகள் மற்றும் உள்நாட்டு அரசியல் நிச்சயமற்ற தன்மை என்பவற்றின் பின்னனியில் 2018இன் பலவீனமான பொருளாதார செயலாற்றத்தின் பின்னர் பொருளாதாரமானது படிப்படியாக நிலைப்படுத்தப்படுகின்றது. உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது 2018இன் 3 சதவீதத்திலிருந்து இவ்வருடம் அண்ணளவாக 3.5 சதவீதத்திற்கு முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பணவீக்கம் ஜனவரி மாதத்தில் இலக்கினை நோக்கி மீட்சியடைந்ததுடன் 2019இல் 4.5 சதவீதத்தை அடையுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. உயர்ந்தளவான எரிபொருள் விலைகள், குறைந்தளவான வேளாண்மை ஏற்றுமதிகள் மற்றும் வாகனங்கள் இறக்குமதிகளின் அதிகரிப்பு என்பவற்றின் பின்னனியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை 2018இல் 3.2 சதவீதத்திற்கு விரிவடைந்ததுடன் செலாவணி வீதத்திலான திருத்தத்தின் நன்மையினால் 2019இல் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

“நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றமானது 2018இன் இரண்டாம் அரைப்பகுதியில் பின்னடைவை கண்டதுடன் பன்னாட்டு நாணய நிதியத்தினால் துணைபுரியப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான ஐந்தாவது மீளாய்வின் முடிவினை தாமதப்படுத்தியிருந்தது. பலவீனமான அரசிறையின் முக்கிய காரணமாக திசெம்பர் மாதத்திற்கான நிகழ்ச்சித்திட்ட இலக்கிடலைக் காட்டிலும் முதலாந்தர இறை மிகையானது வீழ்ச்சியடைந்திருந்தது. இறுக்கமான உலக நிதியியல் நிலைமைகளில் இருந்தான சந்தை அழுத்தங்கள் 2018இன் இறுதியில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியினால் மோசமடைந்திருந்ததுடன் இதன் காரணமாக வெளிநாட்டு செலாவணி ஒதுக்கு இலக்குகளும் பாரியளவினால் தவறவிடப்பட்டுள்ளது.

“இத்தகைய கடினமான சூழ்நிலையில், உயர்ந்த அளவிலான பொதுப்படுகடன் மற்றும் குறைந்தளவான ஒதுக்கு தாங்கிருப்புக்கள் என்பன காணப்படுகின்ற நிலையில் பொருளாதார சீர்த்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் கடின-வெற்றி நன்மைகளை பாதுகாத்தல், பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கு ஆதரவளித்தல், அதிர்வுகளிலிருந்து பொருளாதாரத்தின் தாக்குபிடிக்கும் தன்மையை பலப்படுத்தல் என்பவை தொடர்பில் அனைத்து ஆர்வலர்களிடமிருந்து கருத்தொருமித்த முயற்சிகள் தேவையாகவுள்ளன. சந்தை நம்பகத்தன்மையை மீட்டல் மற்றும் எதிர்வரவுள்ள அதிகளவான மீள்நிதியிடல் தேவைப்பாட்டை அடைந்துகொள்ளல் என்பன தொடர்பில் சீராக்கல் உத்வேகத்தை புதுப்பிப்பதற்கு அதிகாரிகளின் நிகரில்லா அர்ப்பணிப்புக்கள் இன்றியமையாதவையாகும்.

“பொதுப்படுகடனின் நிலைத்துநிற்கும் தன்மையை அடைந்துகொள்வதற்கு உள்நாட்டு அரசிறை திரட்டல்களின் ஊடான நிலைத்துநிற்கும் இறைத்திரட்சி மற்றும் முன்மதியுடைய செலவினம் என்பன முன்னுரிமை கொண்டதாக விளங்குகின்றன. இக்குறிக்கோளை அடைந்துகொள்வதற்கு 2018 புதிய உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் சீரான அமுல்படுத்தல்கள் மற்றும் உண்ணாட்டரசிறை மற்றும் சுங்கத் திணைக்களங்கள் என்பவற்றின் நவீனமயப்படுத்தல் என்பன தேவையாகவுள்ளன. 2019 வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக முதலாந்தர மிகையினை மொ.உ.உ இன் சதவீதமாக 1.5 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கான அதிகாரிகளின் அர்ப்பணிப்புக்களை குழுவானது வரவேற்றுள்ளது. விரிவாக்கப்பட்ட நிதிய வசதியுடன் துணைபுரியப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழான அதிகரித்த வியாபார நட்புத்தன்மைவாய்ந்த வரிச் சூழலானது முதலீடு மற்றும் வளர்ச்சி என்பவற்றிற்கு ஆதரவளிக்கும் அதேவேளை அதிகரித்த அரசிறை திரட்டலானது சிறந்தளவு இலக்கிடப்பட்ட சமூக மற்றும் மூலதன செலவினம் என்பவற்றிற்கான இடைவெளியை வழங்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஆற்றல்வாய்ந்த இறை விதிகள் மற்றும் நடுத்தரகால படுகடன் தந்திரோபாயமொன்றின் புதிய வெளியீடு என்பவற்றை பின்பற்றுவதன் ஊடாக சீராக்கல் நிகழ்ச்சித்திட்ட குறிக்கோள்களுக்கு இசைந்து செல்லும் விதத்தில் 2020இல் இறைப்பற்றாக்குறையை மொ.உ.உ. இல் 3.5 சதவீதத்திற்கும் நடுத்தர காலத்தில் மொ.உ.உ.இல் 2 சதவீதத்திற்கும் கொண்டுவரும் வகையில் பொதுப்படுகடனை உயர்ந்தளவான கீழ்நோக்கிய பாதையில் கொண்டுசெல்லும் நோக்கிலான அதிகாரிகளின் அர்ப்பணிப்புக்களை குழுவானது வரவேற்றுள்ளது.

“இறை நிலைத்துநிற்கும் தன்மையை பாதுகாத்தல் மற்றும் சீர்திருத்த நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட தாமதங்களை மீண்டும் பிடித்துக்கொள்வதற்கு உதவும் வகையில் அரசிற்குச் சொந்தமான பாரிய தொழில்முயற்சிகளில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் செலவு வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்கு புதுப்பிக்கப்பட்ட முயற்சிகள் தேவையாகவுள்ளன. அதிகரித்துச் செல்லும் இறை இடர்நேர்வுகளை நிவர்த்தி செய்வதற்கு அதிகாரிகள் சிறிலங்கன் எயார்லைனை ஆற்றல் வாய்ந்த வர்த்தக மற்றும் நிதியியல் அடிப்படைக்கு கொண்டு வருதல் மற்றும் முழுமையான எரிசக்தி விலையிடல் சீர்திருத்தம் போன்ற திட்டங்களுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

“போதுமான மட்டங்களில் ஒதுக்கு தாங்கிருப்புக்களை மீளக்கட்டியெழுப்பவும் அதிர்வுகளிற்கெதிராக பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காகவும் செலாவணி வீதத்தில் நெகிழ்ச்சித்தன்மையை அனுமதிக்கவும் இலங்கை மத்திய வங்கியின் அர்ப்பணிப்பிற்கு குழு ஆதரவளிக்கின்றது. இலங்கை மத்திய வங்கியானது காத்திரமான மற்றும் தரவு சார்ந்ததான நாணயக் கொள்கையைத் தொடர்ந்து பேண வேண்டியுள்ளதுடன் பணவீக்க அழுத்தங்கள் மீண்டும் தோற்றம் பெற்றால் கொள்கை வட்டி வீதங்களை இறுக்குவதற்கும் தயாராக இருத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் சட்டக் கட்டளை, தீர்மானமெடுத்தல் கட்டமைப்புக்கள், சுயாதீனம், பொறுப்புக்கூறல் மற்றும் பணவீக்க இலக்கிடலினை நோக்கியதான வழிகாட்டலின் வெளிப்படைத்தன்மை என்பவற்றைப் பலப்படுவத்துவதற்கு நாணய விதிச் சட்டத்தில் திருத்தங்களை இறுதிப்படுத்துமாறு அதிகாரிகளிடம் குழு வலியுறுத்தியுள்ளது.

“அண்மையில் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டு மீளாய்வினால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைப்புக்களிற்கு இசைந்து செல்லும் வகையில் நிதியியல் துறை உறுதிப்பாட்டினைப் பலப்படுத்துவதற்கு தற்போது இடம்பெற்றுவரும் படிமுறைகள் வரவேற்கப்படுகின்றன. இவை நிதியியல் நிறுவனங்களிற்கான நெருக்கடி – தயார்படுத்தல் கருவிகளை பலப்படுத்தல் மற்றும் ஒழுங்குமுறையாக்கல்

மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பில் ஒத்திசைவை ஏற்படுத்தல் போன்ற முயற்சிகளை உள்ளடக்குகின்றது. இலங்கை மத்திய வங்கியானது பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் என்பவற்றிற்கெதிரான நடவடிக்கைகளை பலப்படுத்தல் தொடர்பிலும் முன்னேற்றம் கண்டுள்ளது.

"அமைப்பியல் சீர்திருத்தங்கள் வலுவான மற்றும் அனைத்தையுமுள்ளடக்கிய வளர்ச்சிக்குத் தொடர்ந்து உதவியளிப்பதுடன் பொருளாதாரச் சீராக்கங்களின் பகிர்வுத் தாக்கத்தைக் குறைப்பதற்கும் ஆதரவளிக்க வேண்டும். வர்த்தக திறந்த தன்மை மற்றும் முதலீடுகளை ஊக்குவித்தல், ஆளுகை மற்றும் ஊழலுக்கெதிரான கட்டமைப்பை வலுப்படுத்தல், பெண் தொழிற்படைப் பங்களிப்பை ஊக்குவித்தல், சமூக பாதுகாப்பினை மேம்படுத்தல் மற்றும் இயற்கை அனர்த்தங்களிற்குப் பதிலளிக்கும் வகையிலான நெருக்கடி தயார்ப்படுத்தல் என்பவற்றை முன்னுரிமைகள் உள்ளடக்குகின்றன."

குழுவானது பிரதம மந்திரி விக்கிரமசிங்க, நிதி அமைச்சர் சமரவீர, நிதி இராஜங்க அமைச்சர் விக்கிரமரத்ன, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் குமாரசுவாமி, ஏனைய அரச அலுவலர்கள் மற்றும் வியாபார சமூகத்தினரின் பிரதிநிதிகள், உள்ளூர் சமூகம் மற்றும் பன்னாட்டுப் பங்காளர்கள் ஆகியோரைச் சந்தித்தது.